STC.No. 1380/2024
நாள் 01.07.2025.
P.W.1 – (சிவகுமார் )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் நெல் தரகு வேலை பார்க்கவில்லை என்றாலும் நான் நெல் விளைச்சல் செய்யும் சம்சாரி என்றால் சரிதான். நான் நெல் விளைச்சல் செய்வதற்கு ஆதரமாக என்னுடைய பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு 2024ம் ஆண்டு என் பெயரில் எவ்வளவு நெல் விளைவிக்கும் நிலம் உள்ளது எனக் காட்ட ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெயரில் நெல் விளைவிக்கும் நிலம் இல்லை. என் அப்பா பெயரில் உள்ளது. என் அப்பா பெயரில் தம்பிபட்டி கிராமத்தில் சர்வே நம்பர் 29/1ல் 96 செண்டும், மகாராஜபுரம் கிராமத்தில் சர்வே நம்பர் 253/1 மற்றும் 253/3ஏ சர்வே நம்பர்களில் மொத்தம் 2 1/4 ஏக்கர் நிலம் உள்ளது. என் அப்பா உயிருடன் உள்ளார். என் உடன்பிறந்தவர்கள் 2 பெண் பிள்ளைகள் ஆவார்கள். எங்களுக்கிடையே பாகம் பிரிக்கவில்லை என்றால் என் அப்பா எனக்கு சொத்து எழுதி கொடுத்துள்ளார். என் சகோதரிகளுக்கு செட்டில்மண்ட் செய்துள்ளார். நான் மேற்சொன்ன புலஎண்களில் உள்ள சொத்து என் அப்பா அவரிடம் வைத்துக் கொண்ட சொத்து என்றால் என் அப்பா சொத்து நான் பார்த்து வருகிறேன்.

நான் அதுபோக, அந்த சொத்தின் அருகாமையில் உள்ள சொத்தை வாய்மொழியாக உழவடை செய்துவருகிறேன். அது வேறு நபரின் சொத்து நான் சொன்னது போல் உழவு செய்வது குறித்து சாகுபடி அடங்கலை பார்த்தால் தெரியவரும். பொதுவாக, எங்கள் கிராமத்தில் இட்லிக்கு பால்வெட்டு நெல்தான் சாகுபடி செய்வார்கள் என்றால் அந்த நெல் வகையும் சாகுபடி செய்வார்கள். டிலக்ஸ் நெல் வகையும் சாகுபடி செய்வார்கள். 2024 சமயத்தில் பால்வெட்டு நெல் மூடை ரூ.1,500/– விற்கும் என்றாலும் டிலக்ஸ் நெல் மூடை ரூ.1,700/– விற்கும் என்றாலும் சரிதான். எனக்கு நெல்லை சேமித்து வைத்துக் கொள்ளும் குடோன் கிடையாது. வீட்டில் சேமித்து வைக்க இட வசதி உண்டு. எங்கள் ஊரில் நெல் சம்சாரியிடம் கொள்முதல் செய்து மில்லில் கொடுக்கும் வியாபாரம் செய்யும் வேலைபார்க்கும் பவுன்செட்டியார் மகன் மனோகரனை தெரியும். அவர் எனக்கு அண்ணன் முறை. எனக்கும் மனோகரனுக்கும் 2024ம் ஆண்டு சுமுகமான உறவு என்றால் ஆம். எங்களுக்கிடையே பிரச்சனை கிடையாது என்றால் ஆம். பார்க்கும்போது பேசிக் கொள்வோம். பொதுவாக, எங்கள் ஊர் நெல் சம்சாரிகள் மனோகரன் மூலமாக மில்லுக்கு அனுப்புவார்கள் என்றால் அவரை போல் பல வியாபாரிகள் உள்ளார்கள்.

ஆஜர் எதிரிக்கும் மனோகரனுக்கும் நெல் வியாபாரம் செய்வதில் நல்ல பழக்கம் உண்டு என்றால் எனக்கு தெரியாது. என் புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் மனோகரன் மூலமாக எனக்கு எதிரியை தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனோகரன் நெல் வியாபாரம் பார்க்கும்போது அவர் என் பெரியம்மா மகன் ஆக இருக்கையில் அவரை தவிர வேறு நபர்கள் மூலமாக நெல் விற்பனை செய்ய மாட்டேன் என்றால் யார் அதிக விலை தருகிறார்களோ அவர்கள் மூலமாக விற்பனை செய்வேன். பொதுவாக, எங்கள் கிராமத்தில் வருடத்திற்கு 2 போகம் என்றால் சரி. பொதுவாக, ஜனவரி மாதம் மற்றும் ஜுன் மாதம் ஒரு அறுவடையும் நடைபெறும் என்றால் ஒரு மாதம் முன்னபின்ன நடைபெறும்.

என் வழக்குப்படி என் பூமியில் விளைந்த நெல் முழுவதையும் எதிரிக்கு கொடுத்தேனா என்றால் 105 மூட்டை விளைந்தது 100 மூட்டையே எதிரிக்கு கொடுத்தேன். ஒரு ஏக்கரில் அந்த சமயத்தில் 20 முதல் 25 மூட்டை வந்திருக்கும். நான் சொல்வதுபோல் கணக்கிட்டு பார்த்தால் அந்த சமயம் 105 மூட்டை நெல் விளைந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவை விசாரித்தால் உண்மையில் சொத்து உள்ளதா நான் நெல் சாகுபடி செய்தேனா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரி. எனக்கு அந்த கிராமத்தில் எந்த பூமியும் கிடையாது என்றாலும் நான் நெல் சாகுபடி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் எங்கள் கிராமத்தில் மோட்டார் பழுது நீக்கும் பணி செய்துவருகிறேன் என்றால் விவசாயமும் செய்கிறேன் மோட்டார் பழுது நீக்கும் பணியையும் செய்கிறேன். எனக்கு கிராமத்தில் விவசாய நிலம் ஏதுவும் இல்லாததால் நான் பட்டா அடங்கல் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அவசியம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை.

நான் எதிரியுடன் இந்த வழக்கில் சொன்ன வியாபாரத்திற்கு முன்பு 2 முறை வியாபாரம் செய்துள்ளேன். நான் எதிரியிடம் வியாபாரம் செய்ததாக சொல்வது குறித்து சிட்டை அல்லது வேறு ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் ஆம் மனக்கணக்கு தான். எதிரிக்கும் என் அண்ணன் மனோகரனுக்கும் தான் நெல் வியாபாரம் இருந்து வந்தது என்றாலும் வழக்கிற்காக எனக்கு தெரியாது என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் என் அண்ணன் மனோகரனுக்கும் வியாபாரம் சம்மந்தமாக பிரச்சனை வந்ததால் மனோகரனுக்கு பாதுகாப்புகாக எதிரி கொடுத்த காசோலையை என் மூலமாக வசூலுக்கு தாக்கல் செய்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் நெல் கொள்முதல் செய்யவில்லை என்றாலும் எனக்கு எந்த பணமும் கொடுக்கவேண்டியதில்லை என்றாலும் சரியல்ல.

எனக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும் நான் இந்த வழக்கை பொய்யாக எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு நெல் கொடுத்ததாக சொல்வது எங்கள் ஊரில் என்னை தவிர்த்து வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். என் வீடு தோப்பிற்குள் உள்ளது. நான் உண்மையில் எதிரிக்கு நெல் கொடுக்காததால் எங்கள் ஊரில் யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டடச்சருக்கு சொல்லி தட்டடச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.